# ஐ.எம்.எப். பிரதிநிதிகள் - சஜித் சந்திப்பு பல்வேறு விடயங்கள் கலந்துரையாடினர்

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறுதிக் கலந்துரையாடலின் நிமிர்த்தம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அரசு உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்.

2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 08 திங்கட்கிழமை 25.09.2023 கதிர் 78






## சாந்தனை அழைத்துவரும் முயற்சிகள் எந்தப் பலனையும் இதுவரை தரவில்லை

### 10 மாதமாக அலையும் தாயார் வேதனை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு மீள அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சாந்தனின் தாயார் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

ரஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன், கடந்த ஆண்டு இந்திய மத்திய அரசினால் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் விடுதலைக்குப் 2 ➤

## சிங்களப் பாடசாலைகளை அருகாமை தமிழ்ப் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சிக்கு நான் ஒருபோதும் இடந்தரவே மாட்டேன்!

### மனோ கணேசன் திட்டவட்ட அறிவிப்பு



"கொழும்பு கல்வி வலயத்தில் மாணவர் தொகை குறைந்த சிங்களப் பாடசாலைகளை அருகாமை தமிழ்ப் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சியை, தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் சிலர் முன்னெடுக்க முயல்கிறார்கள். எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புக்களையும் பிடுங்க முயலும் 2 ➤

## சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விசாரணை அவசியம் - ஹர்ச டி சில்வா

ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் எதிர்க்கட்சியினரின் கொள்கையிலேயே நாட்டின் பெரும்பான்மையான மக்களும் இருக்கின்றார்கள், என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்வதில் ஆளும் கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் எதிர்க்கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

2 ➤



## திலீபனின் நினைவேந்தலுக்காக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் தாயகம் எங்கும் உணர்ச்சியுடன் இடம்பெற்று வரும் நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இன்றைய தினம் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ் நகர் பகுதி மற்றும் நல்லூர் தியாகதீபம் திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிகளில் வைத்து பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை மாணவர்கள் வழங்கினர்.( 01)

## சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க அமெரிக்கத் தூதரகம் தாமதம்!

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்வதற்கான விசாவினை வழங்குவதற்கு அமெரிக்கத் தூதரகம் தாமதிப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ள இலங்கை நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ள சரத் வீரசேகரவிற்கு விசா வழங்க முடியாது எனவும், அவருக்குப் பதில் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமியுங்கள் எனவும் அமெரிக்கா, இலங்கை நாடாளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளதாகவும் அது தொடர்பாகச் சர்ச்சை எழுந்துள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற சபாநாயகருக்கு தான் கடிதமொன்றை எழுதவுள்ளதாக சரத் வீரசேகர தெரிவித்துள்ள நிலையில், இது குறித்து சபாநாயகர் அமெரிக்கத் தூதுவரிடம் கலந்துரையாடி விளக்கமொன்றைப் பெறுவார் என நம்புவதாகவும் 2 ➤



## 30 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்னுடன் கென்யப் பிரஜை விமான நிலையத்தில் கைது!

முப்பது கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கென்யப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதியோப்பியாவில் இருந்து வரும்போதே 26 வயதான கென்யப் பிரஜை சுமார் 4 கிலோ நிறையுடைய கொக்கெய்ன் போதைப்பொருளை எடுத்துவந்துள்ளார்.

கென்யப் பிரஜை எதியோப்பியாவின் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வடமாகாண தடகளப் போட்டி 2023 100 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனை





வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான இவ்வருடத்துக்கான தடகளப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் தனநாதன் தமிழினியன் 11.8 செக்கன்களில் ஓட்டத்தை நிறைவுசெய்து புதிய சா-தனையை நிலைநாட்டியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையே கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் மகாஜனக் கல்லூரி தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தி 22 பதக்கங்களுடன் 178 புள்ளிகளைப் பெற்று முதன்மைநிலை பெற்றது.

வடமாகாணத்தில் உள்ள 13 கல்வி வலயங்களில் வலிகாமம் கல்வி வலயம் 669 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடம் பெற்றது. இதற்கு 178 புள்ளிகளைப் பெற்று மகாஜனக் கல்லூரி பெரும் பங்காற்றியது. (04)

## 30 கோடி ரூபா பெறுமதியான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிஸ் அபாபாவிலிருந்து கட்டாரின் தோஹாவுக்கு வந்து அங்கிருந்து கட்டார் ஏயார்வேஸ் விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப் பொதியில் 3 பிஸ்கட்கள் டின்களில் 4 கிலோ எடையுள்ள 180 கொக்கெய்ன் வில்லைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கென்யப் பிரஜை முதல் தடவையாக இலங்கைக்கு வந்திருந்த நிலையில், மேலதிக விசாரணைகளுக்காகக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

## சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்திருப்பதாக அறியக்கிடைத்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக கடந்த வருடம் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியில் அமெரிக்காவின் பங்கு குறித்த தனது விமர்சனங்களால் அமெரிக்கா அதிருப்தியடைந்திருக்கலாம் எனவும், குறித்த தா-மதத்திற்கு இதுவே காரணமாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தனக்கு விசா வழங்கத் தவறியுள்ளமை குறித்து தெளிவான விளக்கம் வேண்டும் எனவும் சரத்வீரசேகர குறிப்பிட்டுள்ளார், என அச்செய்தி மேலும் கூறுகிறது. (த)

## சர்வதேசத்தால் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியின் கொள்கையிலேயே இந்த நாட்டில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அது தான் இந்த உண்மைகளை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்பது.

இந்தத் தாக்குதலால் சுமார் 15 நாடுகளின் பிரஜைகள் உயிரிழந்திருக்கின்றார்கள். ஆகவே, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவருக்கும் பொருத்தமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியினர் இராணுவத்தினருக்குச் சேறு பூச நினைக்கின்றார்கள், என்று பலரும் கூறுகின்றார்கள்.

அவ்வாறு எதுவும் இல்லை. கடந்த பல வருடங்களாக நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவுக்கு அருகில்தான் அமர்கின்றேன்.

தனிப்பட்ட ரீதியிலும் அவர் எனக்குப் பல விடயங்களைக் கூறியிருக்கின்றார். வருடக்கணக்காக இடம்பெற்ற யுத்தத்தில் போராடி முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரைக் குறை சொல்வதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை.

ஆனாலும், சில நபர்கள் குறித்து சில கேள்விகள் எழுந்துள்ளன. ஆகவே, இது தொடர்பாகத் தேடிப் பார்ப்பதற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரிய தேவை ஒன்று இருக்கின்றது, எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)

## சிங்களப் பாடசாலைகளை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய போலி நல்லிணக்கத்துக்கு கொழும்பு மாவட்ட எம்.பியான நான் ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டேன்" - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு கல்வி வலயத்தில் வடகொழும்பு கோட்டத்தில், கலைமகள் தமிழ் வித்தியாலயத்துடன் அருகாமை சிங்கள மொழி பாடசாலையை இணைக்கும் இரகசிய முயற்சி தொடர்பில் மனோ எம்.பி, கொழும்பு கல்வி வலயப் பணிப்பாளர் தேவபந்துவுக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டு, எழுத்து மூலம் அனுப்பியுள்ள கடிதத்தில்,

தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் ஒரு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் இந்த முயற்சியை ஒருசில மதத்தலைவர்கள் செய்ய முயல்கிறார்கள். ஒரு கீழ்மட்ட அரசியல்வாதியும் இதில் தொடர்புற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட எம்.பியான எனக்குத் தெரியாமல் செய்யப்படும் இந்த இரகசிய முயற்சி பற்றி கலைமகள் தமிழ் பாடசாலை பெற்றோர்கள் எனக்குப் புகார் செய்துள்ளார்கள்.

ஆகவே, என்னிடம் விளையாட வேண்டாம். நான் இதற்கு இடம் கொடுக்க மாட்டேன்.

மாவட்டங்களின் கல்வி நிர்வாக சீர்திருத்தங்களுக்கு எனது நண்பர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் முயற்சிகளுக்கு நான் ஒத்துழைப்பு வழங்குகின்றேன்.

அவை பற்றி நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சு ஆலோசனை குழு, கல்வி மேற்பார்வை குழு, கொழும்பு மாவட்ட மற்றும் பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நாம் பார்த்துக்கொள்கின்றோம்.

அதிகாரமும், மக்கள் ஆணையும் இல்லாத நபர்களின் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடாதீர்.

உண்மையான நல்லிணக்கம் உருவாக, வளர்ச்சியடைந்த கொழும்புப் பாடசாலைகளான ரோயல் கல்லூரி, இசிபதன கல்லூரி, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றில் திட்டமிட்டு குறைக்கப்படும் தமிழ் வகுப்புகளைக் கூட்டுங்கள்.

வளர்ச்சியடைந்த ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி, விசாகா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் மொழிப் பிரிவுகளை ஆரம்பியுங்கள்.

இதன் மூலம் தமிழ் மொழி மூலப் பிள்ளைகளுக்கு வளர்சியடைந்த நல்ல கல்வி வாய்ப்புகளை வழங்குங்கள்.

இதைச் செய்யாமல், எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புகளையும் பிடுங்க முயலும் இத்தகைய போலி நல்லிணக்கத்துக்குக் கொழும்பு மாவட்ட எம்.பியான இந்த மனோ கணேசன் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டேன், - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## சாந்தனை அழைத்துவரும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், இலங்கைக்கு அவரை மீள அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி, கடந்த 10 மாத காலப் பகுதிக்கு மேலாக திருச்சி சிறப்பு முகாமில் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, தனது மகனை இலங்கைக்கு மீள அழைத்து வந்து தன்னிடம் ஒப்படைக்குமாறு சாந்தனின் தாயார் கடந்த 10 மாத காலமாக பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

குறிப்பாக, இது குறித்து கடந்த மாதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் மூலம் கோரிக்கையொன்றை அவர் விடுத்திருந்தார்.

எனினும், குறித்த கடிதத்திற்கு இது வரையில் வெளிவிவகார அமைச்சிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை எனவும், 10 மாத காலப் பகுதிக்குள் 5 கடிதங்களை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியும் பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஐ.எம்.எப். பிரதிநிதிகள் - .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து மக்களுக்குச் சாதகமான உடன்பாட்டை மேற்கொண்டு அதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றும் சஜித் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.வேலுகுமார் மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர். (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# யாழ்ப்பாணப் பல்கலை சங்கீத, நடன சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறி - உளச்சார்புப் பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தினால் நடத்தப்படும், சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசேட தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து, சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாணவர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 30.10.2023 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (04)

## சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் சிறப்பு நிகழ்வுகள் இன்று




சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாவட்டச்செயலகமும் மாகாண சமூக சேவைத்திணைக்களத்தின் கிளி-நொச்சி மாவட்ட சமூகசேவைத் திணைக்களமும் இணைந்து வருடம்தோறும் முதியோர்களின் உள மற்றும் உடல் ஆரோக்கியத்தை பேணும் வகையில் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றன.

அந்தவகையில் இந்த வருடத்திற்கான நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்க வளாகத்தில் மாவட்ட சமூக சேவைத்திணைக்கள உத்தியோகத்தர் திரு.சுப்பிரமணியம் ஜெயானந்தராசா அவர்களின் தலைமையில் இன்று சிறப்பாக நடைபெற்றிருந்தது.

நிகழ்வில், பாரம்பரிய விளையாட்டுக்கள், வில்லிசை, பட்டிமன்றம், கூத்து, வினாடிவினாப் போட்டி, பண்ணிசை ஆகிய போட்டிகளில் முதியோர் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக சமூகசேவை உத்தியோகத்தர்கள், கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (02)



## விபுலானந்தாவின் கல்விச் சுற்றுலா!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா பாலர் பாடசாலை மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டிருந்தனர்.

பாலர் பாடசாலைப் பணிப்பாளர், ஆசிரியர்கள் தலைமையில் பெற்றோர், மாணவர்கள் இச்சுற்றுலாவில் பங்கேற்றனர்.

இவர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமம் பாசிக்குடா சிறுவர் பூங்கா கலங்கரை விளக்கம் படகுச்சவாரியில் தனித்தீவு போன்ற இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தலைவர் ரி.மேகராசா முன்னாள் தவிசாளர் சிவஞானம் அகிலேஷ்வரன் ஆகியோர் மாணவர்களை வரவேற்றனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் சிறுவர்களுக்கு பஜனையுடன் கூடிய அருளுரை வழங்கினார்.

# செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு பிரிவு பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்வு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப் பிரிவினை, மக்களின் தேவை கருதியும் சிகிச்சைகளுக்கான ஆளணி மற்றும் முக்கிய வளங்களைப் பெறுவதற்காகவும் பிரதேச வைத்திய சாலையாக தரம் உயர்த்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்தன.

தேவையை உணர்ந்து, தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கடந்த ஜூலை 28 ஆம் திகதி, சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்தது. இன்று அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் இன்று நடைபெற்ற இம்முக்கிய கலந்துரையாடலில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹீர் ஆகியோரும் பங்குபற்றியிருந்ததுடன், குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான நியாயம் மற்றும் மக்களின் அபிப்பிராயம் தொடர்பில் விரிவாக விளக்கியிருந்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சின் தரமுயர்த்தல் குழுவானது, செந்நெல் கிராம ஆரம்ப பராமரிப்பு சுகாதாரப்பிரிவினை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கான கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்திய சாலையாகத் தரம் உயர்த்துவதற்காக பெரிதும் ஒத்துழைத்த முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக், இந்நாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் மெலிண்டன் கொஸ்தா, மாகாண திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஏனைய பிரிவுத் தலைவர்களுக்கும் விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பார் தெரிவித்திருந்தார்.




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# தமிழகம் - நாகப்பட்டினம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்கொள்ளையர் தாக்குதல்!



நாகை மாவட்டம் செருதூர் கிராமத்தை சேர்ந்தவர் சபாபதி. இவருக்கு சொந்தமான விசைப்படகில் அவருடைய மகன்கள் பிரதீப், பிரகாஷ், பிரவின், திருமுருகன் உள்ளிட்ட 4 பேர் கடந்த 21 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கோடியக்கரைக்குத் தென்கிழக்கே 10 நோட்டிகல் கடல் மைல் தொலைவில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது, அங்கு அத்துமீறி 2 அதிவேக படகில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் நாகை மீனவர்களிடம் கத்தி முனையில் மீன்கள் மற்றும் தளவாடப் பொருட்களை கேட்டு மிரட்டியுள்ளதாகவும், இதனால் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் நாகை மீனவர்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் கடும் தாக்குதலை நடத்தியதாகவும், பின்னர் கத்தி முனையில் நாகை மீனவர்களின் 3 லட்சம் மதிப்புள்ள 500 கிலோ வலை, 50 ஆயிரம் மதிப்புள்ள மீன்கள், ஜிபிஎஸ் கருவி , 4 செல்போன்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் பறித்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் படுகாயங்களுடன் செருதூர் மீன் இறங்குதளத்திற்கு சென்ற மீனவர்களை அம்புலன்ஸ் மூலம் சக மீனவர்கள் நாகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து இலங்கைக் கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும், இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கைக் கடற்கொள்ளையர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாகை மாவட்ட மீனவர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழுமத்தின் அதிகாரிகள், நாகை மீனவர்களைத் தாக்கி, மீன் மற்றும் வலைகளைக் கொள்ளையடித்துச் சென்ற இலங்கை கடற்கொள்ளையர்கள் 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (04)



## சீன எல்லையில் இந்தியாவின் சாலைப் பணிகள் அதிகரிப்பு

சீன எல்லையில் இந்தியா மேற்கொண்டு வரும் சாலைப் பணிகள் கடந்த 3 ஆண்டுகளில் அதிகரித்து இருப்பதாக இந்திய எல்லைச் சாலைகள் அமைப்பின் (பிஆர்ஓ) இயக்குநர் ராஜீவ் சௌத்ரி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசின் கீழ் செயல்படும் எல்லை சாலைகள் அமைப்பு, நாட்டின் சர்வதேச எல்லைப் பகுதி சாலைகள் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், சண்டீகரில் நடைபெற்று வரும் உலகின் மிகப்பெரிய முப்பரிமாண கொங்கிரீட் அச்சு வளாகத்தின் கட்டுமானப் பணிகளை பிஆர்ஓ இயக்குநர் ராஜீவ் சௌத்ரி ஞாயிற்றுக்கிழமை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதையடுத்து, செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற ராஜீவ் சௌத்ரி கூறுகையில், 'நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, பல்வேறு உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள எல்லை சாலைகள் அமைப்புக்கு இந்திய மத்திய அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளில் அமைப்பின் நிதி ஒதுக்கீடு இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில், பிஆர்ஓ கட்டமைத்த 295 சாலைத் திட்டங்கள், பாலங்கள், சுரங்கப் பாதைகள் மற்றும் விமான ஓடுதளங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 8,000 கோடி மதிப்பிலான 300 திட்டங்களின் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பணிகளின் வேகம் விரைவுபடுத்தப்பட்டிருப்பதால் அடுத்த 4 மாதங்களுக்குள் 60 க்கும் மேலான திட்டப் பணிகள் நிறைவு பெறும். இந்த வேகத்தில் பணிகள் தொடர்ந்தால் எல்லைப் பகுதி உள்கட்டமைப்பில் அடுத்த 4 முதல் 5 ஆண்டுகளுக்குள் சீனாவை இந்தியா முந்திவிடும்.

சீன எல்லையருகே சாலைகளைக் கட்டமைப்பதில் முந்தைய அரசு மிகுந்த அச்சத்துடன் இருந்தது. ஆனால், தற்போதைய ஆட்சியில் சீன எல்லையில் பல்வேறு கட்டுமானப் பணிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. விரைவாகவும், அனைத்து காலநிலைகளிலும் போக்குவரத்து இணைப்பை உறுதிப்படுத்தும் சுரங்கப் பாதைகள் கடந்த 60 ஆண்டுகளில் வெறும் இரண்டு மட்டுமே கட்டப்பட்டன. ஆனால், கடந்த 3 ஆண்டுகளில் 4 சுரங்கப் பாதைகள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 10 சுரங்கப் பாதைகளின் கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. மேலும், 8 சுரங்கப் பாதைகளைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

உத்தரகண்ட், ஜம்மு-காஷ்மீர் ஆகிய உயரமான பகுதியில் சாலைகளில் குவிந்துள்ள பனியை அகற்ற புதிய கருவிகளை பிஆர்ஓ பயன்படுத்துகிறது. இதன்மூலம், குளிர்காலத்தில் சாலைகள் நீண்ட நாள்களுக்கு மூடப்படுவதைத் தவிர்க்கிறோம். சீன எல்லையையொட்டிய டெம்சோக் கிராமத்தில் 19,000 அடி உயரத்தில் உலகின் மிக உயரமான சாலையை அமைத்துள்ளோம். 40 நாள்களுக்கு முன்பு, லடாக்கின் ஹன்லேயில் 15,000 அடி உயரத்தில் ஒரு சுரங்கப் பாதையைத் தொடங்கி வைத்தோம்.

இதுபோன்ற சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் பாதுகாப்புப் படையின் நலனுக்கு மட்டுமல்ல, தொலைதூர கிராமங்கள் மற்றும் கடினமான நிலப்பரப்புகளில் வசிக்கும் மக்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கும் பெரிதும் உதவுகின்றன. மேலும், சாலைகள் தேச வளர்ச்சியின் முதுகெலும்பு' - என்றார். (04)

## அமெரிக்காவில் ஜோ பைடன் நிர்வாகத்தால் பொருளாதாரம் வீழ்ச்சி- பொதுமக்கள் கருத்து

அமெரிக்காவில் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. இதனால், அங்கு அடுத்த ஆண்டு தேர்தலுக்கான பணிகள் தற்போதே சூடுபிடித்துள்ளன.

இதற்கிடையே, ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். அதேசமயம் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் டிரம்பும் போட்டியிடுகிறார். இவர்களைத் தவிர சுயேட்சை வேட்பாளர்கள் பலரும் இந்தத் தேர்தலில் போட்டியிட வரிசை கட்டி நிற்கின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி குறித்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் நேற்று வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தின. இதில் சுமார் 44 சதவீதம் பேர் ஜோ பைடன் ஆட்சியில் தங்களது பொருளாதாரம் சீரழிந்து விட்டதாக கூறி உள்ளனர். சுமார் 37 சதவீதம் பேர் மட்டுமே ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். 56 சதவீதம் பேர் இவரது செயல்பாட்டை ஏற்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

அதேசமயம் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகத்தை சுமார் 48 சதவீதம் பேர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இது 2021 இல் அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்தபோது இருந்ததை விட 10 சதவீதம் அதிகம் ஆகும். 74 சதவீதம் பேர் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாத அளவுக்கு ஜோ பைடனுக்கு வயதாகி விட்டது என வாக்களித்துள்ளனர்.

எனவே அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடனுக்கு பதிலாக வேறு ஒருவரை நிறுத்த வேண்டும் என 62 சதவீதம் பேர் வாக்களித்துள்ளதாக அந்த கருத்து கணிப்பு கூறுகிறது. (04)

## 7 வருடங்களுக்குப் பின்னர் ஈரான் - மாலைதீவு நாடுகளுக்கு இடையில் மீண்டும் தூதரக உறவு



ஈரானின் நட்பு நாடாக இருந்த மாலைதீவு சுமார் 40 ஆண்டுகள் அதனுடன் தூதரக உறவை கொண்டிருந்தது. ஆனால், மத்திய கிழக்கு நாடுகள் விவகாரத்தில் அதன் கொள்கைகள் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக மாலைதீவு கருதியது.

இதனால் கடந்த 2016 ஆம் ஆண்டு இரு நாடுகளும் தங்களது தூதரக உறவை முறித்துக் கொண்டன.

இந்தநிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா.சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் சமீபத்தில் நடைபெற்றது. இதில், ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் மாலைதீவு வெளியுறவு அமைச்சர் அகமட் கலீல் ஆகியோர் இந்த விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து,

7 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தூதரக உறவைத் தொடங்குவதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

இது குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகம், இரு நாடுகளின் நலன்கள் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (04)


சுற்றுலாப் பணியகம்
வடக்கு மாகாணம்
பெருமையுடன் வழங்கும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir



பேராசிரியர் சி. சிவேசன்
நிகழ்ச்சித் தலைவர்
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்தும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# உலக சுற்றுலா தினம்

### அறிமுகம்

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மானிட இனத்தின் அசைவும், இயக்கமும் இனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இடம்பெற்றது. தேவைகள்வரையறையற்றவை, வளர்ந்து செல்பவை. இத்தகைய தேவைகளினை பூர்த்தி செய்வதற்கு பயணங்கள் தேவைபடுகின்றது. அத்தகைய பயணங்களின் வடிவங்களும், முறைகளும் கால மாற்றம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் போன்றவற்றல் வேறுபாடு கின்றன. இத்தகைய நகர்வுகள், பயணங்கள், சமகாலத்தில் நாம் வியந்து நோக்குகின்ற “சுற்றுலா“ என்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த பாரிய தொழில்துறையின் உருவாக்கத்திற்கு அடிப்படையானது.

சுற்றுலா என்கின்ற பதம் பதினோராம் நூற்றாண்டுகளிலே அதிகம் புழக்கத்திலிருந்த டொனர்ஸ் (Tornus) என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியது. “டூர்“ (Tour) என்ற ஆங்கிலச் சொல்லின் கருத்து யாதெனில் ஓர் வட்டத்தின் சுழற்சியினைக் குறிப்பதாக அமைந்துள்ளது. நவீன சுற்றுலாவின் வரலாறு 17ம் நூற்றாண்டில் இருந்து நோக்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பியாவில் வாழ்ந்த இளம் பிரபுக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக பிரான்ஸ், கிறீஸ், இத்தாலி மற்றும் ஜேர்மன் போன்ற நாடுகளுக்கு கலை மற்றும் கலாசாரம், பாரம்பரியம், மரபுரிமை போன்றவற்றினை அறிதலின் நோக்கமாகக் கொண்டு பயணங்களினை மேற்கொண்டனர்.

அடிப்படையில் நீண்ட பயணங்களின் தோற்றமானது அத்மா ஈடேதத்துக்கன சமய அனுஷ்டானங்களிலும்இ வருமான ஈட்டலுக்கன வணிகத்தில் ஈடுபடும் நோக்கிலும் அமைந்தன. இவ்வாறு மானிட இனம் சமுக பொருளதர ஈடேற்றத்துக்கு என பயணங்களினை மேற்கொண்டனர் என்பதற்கு வரலாற்று ரீதியாக சான்றுகள் பல உள்ளன. அதிலும் தமிழர்கள் சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே கடல்வழிப் பயணங்களில் ஈடுபட்டனர் என்பதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன.

“பண்டைக்கால வர்த்தகத்தின் சுருக்கமான வரலாறு“ எனும் நூலில் பண்டைக்கால வணிகத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிடும் போது கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய இராச்சியமானது பாலஸ்தீனம், நுபியா போன்ற நாடுகளுடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததும் கி.பி 608ம் ஆண்டளவில் எகிப்தியரும் பினிசியர்களும் கடல் வழியாக கூட்டாக ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

சிறப்பாக சங்ககால இலக்கியங்களிலும் சங்ககாலத்துக்கு முற்பட்டதக கருதப்படும் தொல்காப்பியத்திலும் இவை குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக “முந்நீர் வழக்கம்“ என்று கூறப்படுவதிலிருந்து தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னே தமிழர்கள் கடல் கடந்து வாணிப நோக்கத்திற்காக பயணங்கள் மேற்கொண்டார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு வாணிபத்திற்கான பயணமும் ஆத்ம ஈடேற்றத்திற்கான பயணமும் தொடர்ந்து கொண்டிருந்தன. ஆனால் 18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட



கைத்தொழில் புரட்சியின் விளைவாய் ஓர் செல்வந்த வகுப்பு ஐரோப்பிய நாடுகளில் உருவாகியது. அவர்கள் தமது ஓய்வு நேரத்தினை மகிழ்வுக்காய் பயன்படுத்திக் கொள்வதற்கு “பொழுதுபோக்கு சுற்றுலா“ எனும் எண்ணக்கருவினை நடைமுறைக்கு அறிமுகப்படுத்தினர். இவ்வாறாய் இவ் அறிமுகத்தின் பயனக உலகில் ஏனைய நாடுகளும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டன.

பணம் படைத்த வர்க்கத்தினர் தமது ஓய்வு நேரத்தினை பயணங்களில் செலவு செய்தனர். இதன் விளைவாக என்னவோ 19ம் நூற்றாண்டில் தோமஸ்குக் மற்றும் புதல்வர் (Thomas Cook & Son) என்ற முதல் பயண முகவர் நிறுவனம் தோற்றம் பெற்றது. இதன் பேறாய் சுற்றுலாத்துறையானது பல்பரிமாணம் கொண்டு உலகமெங்கும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இராண்டம் உலக மகா யுத்தத்தின் பின் மத்திய தரைக் கடற்கரை சுற்றுலா பயணிகளுக்கிடையே பிரபல்யம் அடைந்தது. இக்காலத்தில் சமூக நலன் மீது ஏற்பட்ட அக்கறையும், ஊழியச் சட்டங்களில் ஏற்பட்ட மறுதல்களும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் பாரிய நேர்கணிய பங்களிப்பினை ஏற்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெகுசன சுற்றுலா பிரபல்யமடைந்தது. காலப்போக்கில் மானிட இனத்தின் வளர்ச்சியும், நாகரீக மாறுதல்களும் சுற்றுலாத்துறைக்கான கேள்வி வடிவங்களில் மாறுதல்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக மரபுரிமைச் சுற்றுலா, பாலியல் சுற் றுலா, விவசாயச் சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, சமய சுற்றுலா-புனித யாத்திரைகள், கல்விச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, இளைஞர் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா என சுற்றுலாவின் வடிவங்கள் மானிடத்தின் தேவைக்கேற்ப உருவகம் பெற்றது.

### இலங்கையில் சுற்றுலாத்துறை

புத்த பகவான் பொதித்த போதனைகள், தத்துவங்கள் இலங்கையின் அநாதி குடிகளிடையே பரவுவதற்கு முன்னர், வெளிநாட்டவர்கள் இலங்கையுடன் பயணத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பதற்கு தபசு (Thapassu) மற்றும் பல்லுகா (Balluka) என்ற இரு சகோதரர்கள் இலங்கைக்கு வணிக நோக்குடன் பயணம் மேற்கொண்டதனை வரலாற்று ஆதாரங்கள் சான்றாக்குகின்றன. எனினும்ஓர் கட்டமைக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சியானது காலனித்துவ ஆட்சிக் காலத்தில்லேயே உருவாக்கப்பட்டது.

குறிப்பாக, 450 வருட காலனித்துவத்தின் பாரம்பரியம்மும், இலங்கையின் எழில் கொஞ்சும் இயற்கை அழகும், காலனித்துவத்திற்கு முன்னரான கட்டடக் கலைகளின் மகிமையும், சிறப்பும் மேலும் வசீகரமான காலநிலையும் நடுத்தர வருமானம் உழைக்கும் ஐரோப்பியர்களை இலங்கை நோக்கி வரவழைத்தது. உண் மையில் இன்னும் அழுத்தமாகக் கூறுவதாயின் ஐரோப்பியர்களினால் இலங்கை குளிர்கால ஓய்வுக்கான ஓர் இடமாக நோக்கப்பட்டது. 1937ம் ஆண்டு பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் “சுற்றுலாப் பணியகம்“ இலங்கையில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் இதன் செயற்பாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தினால் சொபையிழந்து, செயலிழந்ததாகக் போயிற்று.

1960ஆம்ஆண்டு வரையில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, தெங்கு, இறப்பர் போன்றவற்றில்தான் தங்கியிருந்தது. ஆனால் 1960ம் ஆண்டிற்கு பின்னர் உலக சந்தையில் இவற்றுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக அந்நிய செலாவணியை உழைப்பதற்கான ஓர் மாற்று வழியாக சுற்றுலாத்துறையானது நோக்கப்பட்டது. அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனியார் துறையினரும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி மீது அதீத அக்கறை செலுத்தினர்.

குறைந்த முதலீட்டில் கூடிய வருமானத்தினை உழைக்கக் கூடிய துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டமையே காரணமாக அமைந்தது ஆனாலும் இத்துறையானது இன்றுவரை இங்கு தொடர்ச்சியான சவால்களினை எதிர் நோக்குகிறது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியானது நீண்ட காலமாக நடைபெற்ற தமிழர்களின் தாயக மீட்பு போராட்டத்தில் பாதிப்புக்குட்பட்டது. ஆனாலும் 2000ம் ஆண்டுகளின் முற்பகுதியில் கிழக்கில் அறுகம்பை, பாசிக்குடா பளிங்கு கடற்கரை போன்றவை சுற்றுலாப் பயணிகளால் கொண்டாடப்படும் இடங்களாக வளர்ச்சி பெற்றது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# உலக சுற்றுலா .........




2009ம் ஆண்டு, என்றும் "தீராத் தாகத்துடன" மௌனித்த யுத்தத்தின் பின்னரும் வடக்கில் சுற்றுலா வளர்ச்சியானது 2014ம் ஆண்டுவரை மிகவும் மந்த கதியிலேயே காணப்பட்டது.

ஆனால் கடல்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று கடலை ஓய விடுவதில்லை என்பது போல் முதலீட் டாளர்களும், அரச இயந்திரமும் வடக்கில் சுற்றுலா அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ண ஓட்டத் தில் அன்றும், இன்றும் பயணித்தவாறா உள்ளன. இவற்றுக்கு அப்பால் புலம்பெயர் தேசத்தில் வாழும் புலம்பெயர் உறவுகள், புலம்பெயர் முதலீட்டாளர்கள் என்கின்ற போர்வையில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் குறித்து நீண்ட வாதங்கள், பிரதிவாதங்கள், கலந்துரையாடல் கள் மேற்கொண்ட பொழுதும், விளைவு என்னவோ சுற்றுலா அபிவிருத்தி என்பது வடக்கில் ஓர் கானல் நீராய் உள்ளது.

ஆரோக்கியமான பொதுமைப்படுத்திய அபிவிருத்தி மிக அரிதாகவே உள்ளது. சுற்றுலா என்பது 13ம் திருத் தச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசினாலும், மாகாண நிர்வாகத்தாலும் நிர்வகிக்கப்படுகின்ற துறையாக இருப்ப தனால், மாகாண நிர்வாகமும் மத்திய நிர்வாகமும் இசைந்து இணைந்து செயல்படுவது சற்று கடினமாக உள்ளது. இவற்றுக்கு எல்லம் மகுடம் சூடுவது போல் தன்னார்வ நிறுவனங்களும் தங்கள் பங்கிற்கு வடக்கில் சுற்றுலா அபிவிருத்திக்கான ஐந்து ஆண்டு திட்டங்கள் தீட்டுவதுடனும், கொள்கை வகுப்பதுடனும் தங்களு டைய பங்குகளினை முடித்து கொள்ளுகின்றனர். இத்த கைய நிறுவனங்களின் நிதியீட்டத்தில் தயாரிக்கப்பட்ட திட்டங்களும், கொள்கை வண்ண அட்டைகளுடன் உயர் அதிகாரிகளின் அலுமாரிகளினை அழகுபாடுத்து கின்றன.

சுற்றுலா அபிவிருத்தி என்பது வடக்கில் காணப்படுகி-ன்ற மக்களுடைய பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களுக்கு இசைந்தவையாகவே இருக்க வேண்டும். அவ்வாறு அமைகின்ற போதுதான் சுற்றுலாத் துறையானது மக்களுடன் இசைந்த நிலைபேண் தன்மையைக் கொண்டிருக்கும் வளர்ச்சி பெறும்.

### உலக சுற்றுலா தினம்

1980ம் ஆண்டு புரட்டாதி 27 இல் இருந்து உலகெங் கும் உலக சுற்றுலா தினமானது பல்வேறுபட்ட கருப் பொருள்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1970ம் ஆண்டு புரட்டாதி 27ம் திகதி உலக சுற்றுலா நிறுவனம் (United Nations World Tourism Organization) தோற் றுவிக்கப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகள் கழித்து சுற்று லாத்தினக் கொண்டாட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. 2023ம் ஆண்டு உலக சுற்றுலாதினமானது "சுற்றுலா வும் பசுமை முதலீடும்" (Tourism and Green Investment) எனும் கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றது. பசுமை முதலீடு என்பது நிலைபேண் அபிவிருத்தி யினை ஏற்படுத்துகின்ற வகையிலும், இயற்கைச் சூழ லைப் பாதுகாத்தல் மற்றும் சூழலுக்கு இசைந்த நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றினை அடிப்படை நோக்கமாகக் கொண்ட விடுதிகள், சுற்றுலாத் தல அபிவிருத்தி நிறுவனங்கள், கம்பனிகள், மற்றும் திட்ட செயற்பாடுகள் என்பவற்றிற்கு நிதி வளங்களினை ஒதுக்கீடு செய்தலைக் குறித்து நிற்கின்றது.

பசுமை முதலீட்டினுடைய அடிப்படையான நோக்கம் யாதெனில் வணிகமானது சூழலுக்குப் நேர்க்கணிய மான நன்மைகளை ஈட்டித் தரக்கூடிய செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் வணிகர்கள் தமக்கான வருமா னத்தை ஈட்டிக்கொள்ளுதலாகும். இங்கு வருமானமா னது சூழலுக்குப் பாதகமற்ற செயற்பாடுகள் வாயிலாக உழைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள் வதே பசுமை முதலீட்டின் அடிப்படை நோக்கமாகும். இவ்வாறு பசுமை முதலீட்டினை ஊக்குவிக்கும் முகமாக இவ் ஆண்டு உலகெங்கிலும் சுற்றுலாத் தினமானது கொண்டாடப்படுகின்றது.

இந்த வகையில் தமிழ் பேசுகின்ற மக்களின் அடையா ளமாகவும் கலங்கரை விளக்காகவும் இருந்து தமிழை யும் தமிழ்மொழிசார் பண்பாட்டு, விழுமியங்களினையும் வளர்த்து வருகின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இவ் ஆண்டு சுற்றிலா துறையினை மிக விமர்சையாகக் கொண்டாடுகின்றது. நீண்ட கொடிய யுத்தத்தினால் வாழ்விழந்து, வருமானமிழந்து, செல்லும் திசையிழந்து தவிக்கின்ற ஒரு தொகுதி தமிழ் மக்களுக்கு அறிவியல் ரீதியாக தம்முடைய நிபுணத்துவத்தினை வழங்கிக் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அண்மைக்காலமாக பருவகால மாற்றம் மற்றும் அதி கரித்து வருகின்ற சூழலியல் தாக்கங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றது. அந்தவகையில், இவ்வாறான சுற்றுலாத் தினமானது கொண்டாடப்படுவதன் வாயிலாக பசுமை முதலீடுகள் குறித்த விழிப்புணர்வுகளை முதலீட் டாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திக் கொள்ள முனைகின்றது.




இதன் பொருட்டு 2023ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கைலாசபதியரங்கில் சுற்றுலாத் தினமானது வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

அத்தோடு புரட்டாதி 27ம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரை வடமாகாணத்தில் காணப்படுகின்ற சிறு நடுத்தர முயற்சியாளர்களுடைய புத்துணர்வு, புதியன புனைதல் ஆகிய திறன்களை வெளிக் கொண்டுவரும் முகமாக உணவு மற்றும் கைவினைப் பொருட்களின் சந்தையும், மேலும் தமிழன் எதை இழப்பினும் தம் பண்பாட்டு விழுமியங்களை இழக்கான் என்கின்ற அடிப்படையில் தமிழர்களுடைய பண்பாட்டினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கலைநிகழ்வுகளான கூத்து, சிலம்பாட்டம், கரகாட்டம் போன்ற நிகழ்வுகளும் கண்ணுக்கு விருந் தளிக்கவுள்ளன.

மேலும் 27ம் திகதி காலை நிகழ்கின்ற ஆரம்ப நிகழ் வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரி யர் சி.சிறிசற்குணராஜா முதற்கொண்டு இலங்கையின் புகழ்பூத்த சுற்றுலாத்துறைப் பேராசிரியர்கள், திட்ட வகுப்பாளர்கள், தனியார் துறை நிபுணர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து நிகழ்வினை சிறப்பிப்பார்கள். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நீங்களும் மகிழ்ந்து எனையோரையும் மகிழ்விப்பதுடன் நாட்டின் சுபீட்சத்தையும் மேம்படுத்தலாம்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2023இல் வெளியிடப்பெற்றது.